## 08. தலைப்பு 08 – தேசிய பொலிஸ் ஆணைக்குழு

---

### 8.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 மே 12 ஆந் திகதி ஆணைக்குழுவின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 8.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 8.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) இல் காணப்படுகின்ற பொது அவதானிப்பு மற்றும் 8.4 இலிருந்து 8.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

07 செலவு விடயங்களுக்கு கூடுதலாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டில் 08 சதவீதம் தொடக்கம் 53 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

## 8.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 8.4.1 உள்ளகக் கணக்காய்வு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 8.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

ஆணைக்குழுவால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 8.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 770(2) மற்றும் 771(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.6 செயலாற்றல்

### முறைப்பாடுகளின் விசாரணை

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 11 அலுவலகங்களுக்கு மீளாய்வாண்டின் போது பின்வரும் 414 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

| | முறைப்பாட்டின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (அ) | பொலிஸினால் நடவடிக்கை எடுக்கப்படாமை (உதாசீனம்) | 134 |
| (ஆ) | அதிகாரத் துஷ்பிரயோகம் | 103 |
| (இ) | பக்கசார்பு | 83 |
| (ஈ) | ஏனைய | 30 |
| (உ) | அடித்தல் | 14 |
| (ஊ) | சட்டவிரோதமாக தடுத்து வைத்தல் | 21 |
| (எ) | பொய்க் குற்றச்சாட்டு/ கைது செய்தல் | 17 |
| (ஏ) | துன்புறுத்துதல் | 05 |
| (ஐ) | மகளிருக்கும் சிறுவர்களுக்கும் துன்புறுத்துதல் | 04 |
| (ஒ) | இலஞ்ச ஊழல் | 03 |
| (ஓ) | பொலிஸ் கைதில் இருக்கையில் மரணித்தல் | - |
| | மொத்தம் | 414 |

மீளாய்வாண்டின் போது அந்த முறைப்பாடுகளில் 307 அதாவது 74 சதவீதம் தீர்க்கப்பட்டிருந்தது.

## 8.7 விசாரணைகளின் வினைத்திறன்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் படி ஸ்தாபிக்கப்பட்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் போது தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பாக நேரடியாக செயற்பட முடியாதிருந்ததுடன் விசாரணையின் மூலம் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக தொடர்நடவடிக்கைகள்

எடுக்கப்படுவதற்காக அத் தகவல்கள் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

**8.8 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 15 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | - | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 33 | 26 | 07 |
| (iv) | ஆரம்ப நிலை | 13 | 12 | 01 |
| | மொத்தம் | 64 | 53 | 11 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆணைக்குழுவினால் முடியாதிருந்தது.

(ஆ) உள்ளபடியான பதவியணியினரில் அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் இருக்கின்ற 13 சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களும் இரண்டாம் நிலையில் 02 உத்தியோகத்தர்களும், ஆரம்ப நிலையில் ஒரு உத்தியோகத்தரும் உள்ளடங்கியிருந்தனர்.